දුරකථන ) 011 2669192 , 011 2675011
தொலைபேசி ) 011 2698507 , 011 2694033
Telephone ) 011 2675449 , 011 2675280

ෆැක්ස් ) 011 2693866
பெக்ஸ் ) 011 2693869
Fax ) 011 2692913

විද්‍යුත් තැපෑල ) postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல ) MA/MS/L/4/2014 (Tem)
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 06.10.2017
Date )

# සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition & Indigenous Medicine

**பொதுச் சுற்றுநிருப இலக்கம்:** 01 - 60 /2017

பிரதிப் பணிப்பாளர் நாயகம், இலங்கைத் தேசிய வைத்தியசாலை,
மாகாணப் பணிப்பாளர்கள், பிராந்தியப் பணிப்பாளர்கள்,
நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர்கள்,
தேசிய, போதனா, மாகாண விசேட வைத்தியசாலைகள், ஜயவர்தனபுர, இராணுவ, கடற்படை,
பொலிஸ் வைத்தியசாலை ஆகியவற்றின் பணிப்பாளர்கள்,
ஆதார வைத்தியசாலைகளின் மருத்துவ அத்தியட்சகர்கள்,

**தரநிலை மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான தேசிய கண்காணிப்பு முறைமையும், மாதாந்த அறிக்கைகளும்.**

சுகாதார அமைச்சினால் மாகாண பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார பணிப்பாளர்கள் மற்றும் சகல வைத்தியசாலைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர்கள் அத்துடன் மருத்துவ அத்தியட்சகர்கள் ஆகியோரது உதவியுடன் இணையத்தள இ-கண்காணிப்பு முறையொன்றினை **(Online E-Surveillance System)** சுகாதார அமைச்சின் கீழ் பணியாற்றும் தரநிலை மருத்துவ உத்தியோகத்தர்களுக்காக வேண்டி அறிமுகப்படுத்தியுள்ளது. இது மிகவும் இலகுவானது. அத்துடன் இது மருத்துவ சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினை மையமாகக் கொண்டு செயற்படுத்தப்படக்கூடிய கச்சிதமாக கூகுள் தரவுத் தாளாக **(Valid Google Data Sheet)** விளங்கும். ஆனால் இந்த தரவுத்தாள், நிறுவனங்களுக்குள் இணைத்துக் கொள்ளப்பட்ட மருத்துவ அதிகாரிகளின் தனிநபர் கோவைகளுக்குப் பொறுப்பாக உள்ள விடய எழுதுநரினால் அந்தந்த நிறுவனத் தலைவர்களின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலுடன் பேணப்பட்டு, நாளது வரைப்படுத்தப்பட வேண்டும். இது தொடர்பான பயிற்சி உமது நிறுவனத்தில் உள்ள சம்பந்தப்பட்ட சகல விடய எழுதுநர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களை **HRMIS** பிரிவிலிருந்து பெறப்பட முடியும்.

இந்த தரவுத்தாள் நிறுவனங்கள், பிரிவுகள், வாட்டுகள் வரைக்கும் இணைத்துக் கொள்ளப்பட்ட மருத்துவ அலுவலர்களின் சகல விபரங்களையும் உள்ளடக்கியுள்ளது. அதனூடாக நீங்கள் உங்களது தொலைபேசி அல்லது கணணி முறைமையின் ஊடாக எந்த நேரத்திலும் அப்போதைய நிலவரப்படி காணப்படுகின்ற சகல மருத்துவ அதிகாரிகளினதும் புள்ளிவிபரங்கள் மற்றும் நிலவுகின்ற வெற்றிடங்கள்

என்பனவற்றினைப் பெற்றுக் கொள்ள முடியும். ஒவ்வொரு வருடமும் மாதாந்த வேறுபாடுகளை நாளது வரைப்படுத்துவதற்கு ஒவ்வொரு மாதத்திற்கும் 12 நிரல்கள் **(Columns)** உள்ளன. ஆகையால் மத்திய, மாகாண, மாவட்ட மட்டத்தில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு நாளாந்த தகவல்களைத் திரட்டுவதற்கு முறைமையின் வாராந்த நாளது வரைப்படுத்தலை **(Updating)** உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தங்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. இளஞ்சிவப்பு **(Pink)** நிறத் தாளில் அச்சிடப்படும் மாதாந்த திரட்டு (Return) ஒவ்வொரு மாதத்திலும் 05 ஆந் திகதிக்கு முன்னர் சுகாதார அமைச்சின் மருத்துவ சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும். இணைய முகவரி ஊடாக (Gmail) இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்காக தனியான இணைய முகவரியை **(Gmail)** பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அணுகல் முறை **(Access)** அமைச்சினால் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த செயல்முறையை கடைப்பிடிப்பதற்கு மற்றும் இந்த கண்காணிப்பு செயல்முறையின் அடிப்படையில் மருத்துவ அதிகாரிகளின் தகவலை வழங்குவதற்கும் நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் மருத்துவ அதிகாரி (திட்டமிடல்) ஆகியோருக்கு அறிவுறுத்தல் வழங்கவும். இந்த முறைமை வெற்றியளிப்பதற்காக வழங்கப்படும் உமது ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டுகைகள் மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

**ஜனக்க சுகததாச,**
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.